2. அறிக்கைகள் அளித்தல் (தொடர்ச்சி).

(ஆ) வேலை நீக்கம் செய்யப்பெற்ற காவலர்கள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பில் இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொளகிறேன்.

காவல் துறையைச் சார்ந்த ஒரு பிரிவினர் அண்மையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதும், அதன் காரணமாக அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதும் அவை உறுப்பினர்கள் அறிந்ததே. வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இன்னும் மீதமுள்ள ஏறத்தாழ 700 பேர் தற்போது வேலை நீக்கத்தில் இருந்து வருகின்றனர். மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சிலரைத் தவிர மற்ற அனைவரையும் (ஏறத்தாழ 600-க்கு மேற்பட்டவர்கள்) மீண்டும் வேலைக்கு அமர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அவர்கள் மேல் உள்ள குற்றங்களை பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கு டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ், மூன்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஆகியோர் அடங்கிய நான்கு பேர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்படுகிறது. அந்தக் குழு ஆய்வு செய்து தக்க முடிவுகள் எடுக்கும்.

காவலர்கள் கிளர்ச்சி நடைபெற்றபோது, அதில் ஈடுபடாமல் கடமை உணர்வோடு பணியாற்றிய காவலர்களுக்கு முன்னதான ஊதிய உயர்வு (advance increment) ஒன்றும் அளிக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த அறிவிப்பை மன்ற உறுப்பினர்கள் மனதார வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

(இ) விவசாயிகளுக்கு அளிக்கப்பெறும் சலுகைகள் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சார்பில் இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.